06.08.2024

O.S.No.182/2019

வா.சா.1.திருமதி.அருணா என்ற அருணாச்சலம்.  க.பெ.முருகேசன்

சாட்சி இன்று  அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

**குறுக்கு விசாரணை**

1. எனக்கு எழுத படிக்க தெரியுமா என்றால் சுமாராக தெரியும். நான் எஸ்,ஆலங்குளத்தில் குடியிருந்து வருகிறேன். தாவா சொத்திற்கும் ஆலங்குளத்திற்கும் எவ்வளவு தொலைவு என்றால் எனக்கு தெரியாது. தாவா சொத்து அமைந்துள்ள இடம் எனது வீட்டில் இருந்து சுமார் 3 கிலோமீட்டர் இருக்குமா என்றால் தெரியாது. தாவா சொத்து எந்த சர்வே எண்களில் கட்டுப்பட்டது என்றால் சர்வே எண்.169/1 சர்வே எண்.169/2ல் கட்டுப்பட்டது. தாவா சொத்து காலியிடமாக உள்ளது என்றால் பிளாட்டாக உள்ளது. அந்த பிளாட்டும் காலியிடமாக உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்து கம்பிவேலி அமைக்கப்பட்டு உள்ளது என்றால் நாங்கள் கிரையம் வாங்கிய போதுஅவ்வாறு கம்பி வேலி இல்லை, தற்போது கம்பி வேலி அமைக்கப்பட்டுள்ளதா என்றால் எனக்கு தெரியவில்லை, நான் எப்போது தாவாசொத்தினை பார்வையிட்டேன் என்றால் கொரானாவிற்கு முன்பு பார்த்தேன்.

2. யாருக்கு எதிராக இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் கோபாலகிருஷ்ண பள்ளி நடத்துபவர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளேன், எனது இடத்தினை கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்து உட்பட இந்த வழக்கோடு சேர்த்து தாக்கல் செய்துள்ள வழக்கு சொத்துக்களும் ஒரே சமுக்கமாக அமைந்துள்ளது என்றால் சரிதான், அவை அனைத்தையும் சுற்றிலும் முள்கம்பி வேலி அமைக்கப்ட்டுள்ளது என்றால் சரியல்ல, பிரதிவாதிகள் அனுமதி இல்லாமல் தாவா சொத்திற்குள் நுழைய முடியாது என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் தாவா சொத்து உள்ளதா என்றால் இல்லை. தாவா சொத்தில் காட்டப்படும் சொத்திற்கும், தாவாசொத்திற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரிதான். தாவா சொத்தினை சுற்றிலும் எத்தனை கேட் அமைக்கப்ட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. கம்பிவேலியில் 4 திசையில் கேட் உள்ளது என்றால் சரியல்ல.  தாவா சொத்து ஆரம்ப காலம் முதல் இன்று வரை பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட கோபாலகிருஷ்ண கோன் பள்ளி விளையாட்டு மைதானமாக இருந்து வருகிறது என்றால் சரியல்ல.

3. கோபாலகிருஷ்ண கோன் பள்ளி நான் கேள்விபட்டதில்லை. கோபாலகிருஷ்ண கோன் பள்ளி சுமார் 50 ஆண்டுகளுக்கு மேல் இயங்கி வரும் பழமையான பள்ளி என்றாலும், தாவா சொத்து அந்த பள்ளியின் விளையாட்டு மைதானமாக ஆரம்பம் முதல் இன்று வரை இருந்து வருகிறது என்றாலும் சரியல்ல. 2019ம் ஆண்டுக்கு பின்பு நான் தாவாசொத்தினை பார்வையிட்டதில்லை என்றால் சரிதான். நான் கிரையம் பெற்றதாக சொல்லப்படும் பிளாட் எண்.17 ஆகும். நான் கிரையம் பெற்றதாக சொல்லப்படும் பிளாட் எண்.17 சர்வே எண்.169/1 மற்றும் சர்வே எண்.169/2ல் கட்டுப்பட்டுள்ளது. நான் யாரிடம் இருந்து கிரையம் பெற்றேன் என்றால் எனது கணவர், பார்த்தசாரதி என்பவரின் பவர் ஏஜெண்டாக இருந்து எனக்கு கிரையம் கொடுத்துள்ளார். எனதுகிரைய பத்திரம், எனது கணவரின் பவர் பத்திரம் மற்றும் பார்த்தசாரதியின் கிரைய பத்திரம் ஆகியவற்றின் அசல் ஆவணங்களை இந்த வழககில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பார்த்தசாரதி, அய்யனார் என்பவரிடம் இருந்து கிரையம்பெற்றதாக சொல்லப்படும் கிரைய ஆவண அசலையும் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

4. அய்யனார் என்பவர் வா.சா.ஆ-10 கிரைய ஆவணப்படி இஎம்ஜி சௌந்திராஜன் எனப்வரிடம் இருந்து கிரையம் பெற்றுள்ளார் என்று நான் சொல்லி உள்ளேன் என்றால் சரிதான், அந்த கிரைய ஆவணத்தின் அசல் ஆவணத்தினையும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அதே போல் இஎம்ஜி சௌந்திராஜன், அய்யனார் என்பவருக்கு 11.09.1997 தேதியில் பவர் பத்திரம் எழுதி கொடுத்ததாக சொல்லி இருப்பதால் அந்த ஆவணத்தினை நான் தாக்கல் செய்யவும் இல்லை, பார்த்ததும்இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ-10 ஆவணம் கேரளா மாநிலம் பாறசாலையில் பதிவு செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரிதான். வா.சா.ஆ-10 ஆவணம் இஎம்ஜி சௌந்திராஜன் என்பவரது கையெழுத்தினை மோசடியாக இட்டு, அய்யனார் என்பவரால் உற்பத்தி செய்யப்பட்ட ஆவணம் என்றால் எனக்கு தெரியவில்லை. அதே போல் 11.09.1997 தேதியிட்ட பொதுஅதிகார ஆவணமும் அய்யனார் அவர்களால் இஎம்ஜி சௌந்திராஜனின் கையெழுத்தினை மோசடியாக இட்டு உற்பத்தி செய்யப்பட்ட ஆவணம் என்றால் எனக்கு தெரியாது.

5. மேற்படி கிரைய ஆவணம் மற்றும் பொது அதிகார ஆவணத்தினை மோசடியானது என்று பிரதிவாதிகள் தரப்பில் கட்சி செய்துள்ள போதும் அதன் உண்மை தன்மையை நிருபிப்பதற்கு நான் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். இஎம்ஜி சௌந்திராஜன் பெரும் நிலக்கிழார் என்பதால் தாவா சொத்தில் கட்டுப்பட்ட சர்வே எண்கள்.169/1 மற்றும் சர்வே எண்.169/2ல் உள்ள சொத்துக்களை அய்யனாருக்கு கிரையம்செய்ய வேண்டிய அவசியம் இல்லை என்றாலும், அவர் ஒருபோதும் அய்யனாருக்கு கிரையமோ, பொது அதிகார ஆவணமோ எழுதிக்கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. தாவா சொத்தில் நாங்கள் கம்பி வேலி அமைக்கவில்லை, ஆனால் கற்கள் ஊன்றியுள்ளோம். அந்த கற்கள் தற்போது இல்லை என்றால் சரிதான். தாவா சொத்தில் ஒருபோதும் நாங்கள் கற்கள் ஊன்றவில்லை என்றாலும், இந்த வழக்கிற்காக பொய்யாக கற்கள் ஊன்றியதாக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. அய்யனார் மோசடியாக பெற்ற வா.சா.ஆ-10 கிரைய ஆவணத்தின் அடிப்படையில் எனக்கு கிரையம் கொடுத்த முன்னோர்கள் மேற்படி அய்யனாரிடம்இருந்துமோசடியாக கிரையம் பெற்றுள்ளதால் எனது கிரைய பத்திரத்தின் அடிப்படையில் தாவாசொத்தில் எந்த உரிமையும் சித்திக்கவில்லை என்றால் சரியல்ல.

6. நான், அய்யனார் என்பவரின் கிரைய பத்திரம், பார்த்தசாரதியின் கிரைய பத்திரம், பார்த்தசாரதி எனது கணவருக்கு எழுதிக்கொடுத்த பொது அதிகார ஆவணம் மற்றும் எனது கிரைய ஆவணம் ஆகியவற்றினை நிருபிக்காத வரையில் எனது கிரைய ஆவணத்தின் அடிப்படையில் எந்த வித உரிமையும் தாவாசொத்தில் கொண்டாட முடியாது என்றால் சரியல்ல. தாவா சொத்தினை பொறுத்து எனதுபெயரிலோ, எனது முன் பாத்தியஸ்தர் பெயரிலோ வருவாய் துறையில் எந்தவித வருவாய் ஆவணங்களும் ஏற்படவில்லை என்றால் சரிதான். அய்யனார் கிரைய பத்திரம், பார்த்தசாரதியின் கிரைய பத்திரம், எனது கிரைய பத்திரம் ஆகியவை பெயரளவிலேயே உள்ளது என்றாலும், அந்த ஆவணத்தின் அடிப்படையில் நடைமுறைக்கு வரவில்லை என்றாலும் சரியல்ல. தாவா சொத்தில் எனக்கு உரிமை இல்லாத காரணத்தினால்தான் வருவாய் துறையில் நான்பெயர் மாற்றம்செய்து கொள்ளவில்லை என்றால் சரியல்ல. அய்யனாரிடம் இருந்து பார்த்தசாரதி அளந்துஅத்துமால் பார்த்து கிரையம் வாங்கினாரா என்றால் எனக்கு தெரியாது, எனது கணவருக்கு தான் தெரியும்.

7. தாவா சொத்தினை அளந்து அத்துமால் பார்த்து வாங்கினோமா என்றால் எனது கணவர்தான் கிரையம் பெற்று கொடுத்தார் அவருக்கு தான் தெரியும். தாவா சொத்தினை நான் கூறுவது போல் அளந்து அத்துமால் பார்த்து கிரையம் வாங்கவில்லை என்றாலும், ஆரம்பத்தில் இருந்து தாவாசொத்து பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட கோபாலகிருஷ்ணகோன் பள்ளி விளையாட்டு மைதானமாகவும், விடுதியாகவும் தான் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. பிரதிவாதிகளை யார் என்று விசாரித்து தெரிந்துகொண்டேன். பிரதிவாதிகளுக்கு நிறைய நிலங்கள், கல்லூரி, பள்ளி உண்டு என்றால் எனக்கு தெரியாது.

8. இஎம்ஜி சௌந்திராஜன் தாவா சொத்தில் கட்டுப்பட்ட சர்வே எண்கள்.169/1 மற்றும் 169/2 ஆகியவற்றினை பொறுத்து எந்த காலத்திலும் அய்யனாருக்கோ, வேறு நபர்களுக்கோ கிரையமோ, பொது அதிகார ஆவணமோ எழுதி கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. அய்யனார் என்பவர் இஎம்ஜி சௌந்திராஜன் என்பவரிடம் இருந்து கிரையமும், பொது அதிகார ஆவணமும் பெற்றார் என்று இந்த வழக்கிற்காக நான் பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து காலியிடமாகத்தான் உள்ளது. நானோ, எனது கிரையம் கொடுத்தாக சொல்லப்படும் பார்த்தசாரதியோ தாவாசொத்தினை பட்டா வாங்கவில்லை என்றால் சரிதான்.

9. தாவா சொத்தில் கட்டுப்பட்ட சர்வே எண்.169/1 மற்றும் சர்வே எண்.169/2ன் மொத்த விஸ்தீரணம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். இஎம்ஜி சௌந்திராஜனுக்கு கேரளாவில் உள்ள பாறசாலையில் ஒரு செண்டுநிலம் இருந்ததாக எனது பிராதில் சொல்லி உள்ள சங்கதியை பற்றி எனக்கு தெரியாது என்றால் சரிதான். அவ்வாறு ஒரு செண்டு நிலம் இஎம்ஜி சௌந்திராஜன் என்பவருக்கு கேரளாவில் உள்ள பாரசாலையில் இருந்ததற்கான ஆவணம் நான் பார்த்தில்லை என்றால் சரிதான்.

10. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ-26 லே அவுட், எனது கிரைய பத்திரத்துடன் இணைந்து தாக்கலாகவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ-26 ஆவணம் தனியாக தாக்கல் செய்யப்ட்டதால் இந்த வழககிற்காக மேற்படி ஆவணம் உற்பத்தி செய்யப்பட்டு தாக்கல் செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. வழக்கு சொத்திற்கும் வா.சா.ஆ-26 ஆவணத்திற்கும் எந்தவித தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து

கோபாலகிருஷ்ண கோன் டிரஸ்டுக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரியல்ல. தாவா சொத்து கோபாலகிருஷ்ண கோன் டிரஸ்டுக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றாலும், நீதிமன்றத்தில் உரிய முன் அனுமதி பெறாமல் நான் கிரையம் பெற்றுள்ளதால் எனது கிரையம் சட்டப்படிசெல்லதக்கதல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்து எனக்கு தெரிய சமதளமாகதான் உள்ளது, மேடுபள்ளமாக இல்லை.

11. தாவா சொத்தினை கிரையம் பெறுவதற்கு 17.03.1988ல் பள்ளி கல்வி துறையிடம் அனுமதி பெற்றதாக எனது வழக்குரையில் சொல்லி உள்ள சங்கதி எனக்கு தெரியாது என்றால் சரிதான். பிரதிவாதிகள் என்னை இடையுறு செய்ததாக சொல்லி உள்ள சங்கதி இந்த வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்ட சங்கதி என்றால் சரியல்ல. மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் உத்தரவின் பேரில் நீதிமன்ற ஆணையர் தாவாசொத்தினை அளந்தார் என்றால் எனக்கு தெரியாது. சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் உத்தரவின் பேரில் நீதிமன்ற ஆணையர் தாவாசொத்தினை அளந்தார் என்ற விவரம் எனக்கு தெரியும் என்றாலும், இந்த வழக்கிற்காக அதனை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றாலும் சரியல்ல. அவ்வாறு தாக்கல் செய்த அறிக்கையில் தாவா சொத்தில் கட்டுப்பட்ட சர்வே எண்.169/1 மற்றும் 169/2 ஆகியவை பள்ளி விளையாட்டு மைதானமாகவும், பள்ளி விடுதியாகவும் இருந்து வருவதாக கூறியுள்ளார்கள் என்றால் சரியல்ல. அய்யனார் தற்போது உயிருடன் இல்லை.

12. தாவா சொத்து கோபாலகிருஷ்ண கோன் அறக்கட்டளைக்கு பாத்தியப்பட்ட சொத்தாக இருப்பதால் மேற்படி அறக்கட்டளையை இந்த வழக்கில் சேர்க்காததாலும், அதேபோல் பள்ளி கல்விதுறையை தரப்பினராக சேர்க்காததாலும் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. கோபாலகிருஷ்ண கோன் டிரஸ்டில் வங்கி மூலமாக ரூபாய்.50000 வைப்பீடு செய்யப்பட்ட விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். பிரதிவாதிகள் தொடர்பான அசல் வழககு எண்.75/11, 676/2009, 594/2009, 675/09, 671/09 வழக்குகள் தாக்கல் செய்திருந்ததாக நான் பிராதில் சொல்லி உள்ளதால் அந்த விவரமும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். மேற்படி வழககுகளில் தாவாசொத்தில் கட்டுப்பட்ட சர்வே எண்கள்.169/1 மற்றும் 169/2 ஆகியவை குறிப்பிடபடவில்லை என்பதற்காக தாவா சொத்தில் நான் உரிமை கொண்டாட இயலாது என்றால் சரியல்ல.

13. தாவா சொத்து சம்பந்தமாக எனக்கு உரிமையே இல்லை என பிரதிவாதிகள் தரப்பில் எதிரவாதம் செய்து வரும் நிலையில் தாவா சொத்து குறித்து விளம்புகை பரிகாரம் கோராமல் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி இந்த வழக்கு தாக்கல் செய்துள்ள காரணத்தினால் இந்த வழக்கு தள்ளுபடிசெய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. அய்யனார், பார்த்தசாரதி எங்குள்ளார் என்றால் எனக்கு தெரியாது. பார்த்தசாரதியை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்காமல் வழக்கு தாக்கல் செய்துள்ளதால உரிய தரப்பினரை சேர்க்காத காரணத்தினால் இந்த வழககு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. தாவா சொத்து டிரஸ்டுக்கு பாத்தியப்பட்ட சொத்து என்பதால் கோபாலகிருஷ்ண கோன் டிரஸ்ரையும் பள்ளிகல்வி துறையினைரையும் தரப்பினராக சேர்க்காமல் இந்த வழக்கு தாக்கல் செய்துளளதால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

14. தாவாசொத்தின் மதிப்பு செண்டு 1-க்கு சுமார் 3 லட்சம் முதல் 5 லட்சம் இருக்குமா என்றால் எனக்கு தெரியாது. தாவா சொத்தின் மதிப்பு சுமார் செண்டு 1-க்கு சுமார் 5 லட்சம் வரை உள்ளது என்ற விவரத்தினை நான் தெரிந்துகொண்டே தெரியாது என பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தினை நான் முறையாக மதிப்பிடு செய்து நான் நீதிமன்ற கட்டணம் செலுத்தவில்லை என்பதற்காக இந்த வழககு தள்ளுபடிசெய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. தாவா சொத்தின் அனுபவத்தில் நாங்கள் ஒருபோதும் இருந்ததில்லை என்றாலும், எனது கிரைய பத்திரம் ஆவணமாகதான் உள்ளதே தவிர நடைமுறைக்கு வரவில்லை என்றாலும் தற்போது வரை தாவா சொத்து பிரதிவாதிகள் அனுபவத்தில் இருந்து வருகீறது என்றாலும், தாவா தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றாலும் சரியல்ல. தாவா வழக்கில் நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் நகல் என்பதால் அதை சாட்சியமாக அனுமதிக்க முடியாது ஆவணங்கள் என்பதால் அதன் அடிப்படையில் எனது வழக்கிற்கு எந்த அனுகூலமும் ஏற்படாது என்றாலும், அந்த ஆணவத்தினை சாட்சியமாக ஏற்றுக்கொள்ள முடியாது என்றாலும் சரியல்ல.